வர்களும், அந்த டிராக்டர்களைக் கடனாகப் பெற்று, தங்களுடைய வேலையின்மையைப் போக்கிக் கொள்ள அந்த டிராக்டர்களை வைத்துக் கொண்டு பிழைத்துக் கொண்டிருந்தார்கள். அதே போன்று தமிழகத்தில் எத்தனை பட்டயம் பெற்றவர்களுக்கு அந்த டிராக்டர்கள் வழங்கப்பட்டது? அவர்கள் எவ்வளவு பேர் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பரமசிவம். தனிக் கேள்வி போடவும். கேள்வி, இருக்கின்ற எண்ணிக்கையைக் கூட்டிக் கொடுப்பது பற்றியது. ஒரு குறிப்பிட்ட செக்ஷனுக்குக் கொடுத்திருக்கிறார்களா என்பது இதில் கிடைக்காது.

வினா எண் 114 திரு. கே. ஏ. மனோகரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர். —உறுப்பினர் இருக்கையில் இல்லை.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 115, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

115—

பார்த்திபனூர் பகுதிகளில் வரப்பு திரட்டுவதற்காக ஒதுக்கிய தொகை.

*14877— டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி டிவிசன் பார்த்திபனூர் டிவிசன்-1 மற்றும் பார்த்திபனூர் டிவிசன்-2 வரப்பு திரட்டுவதற்கு ஒதுக்கிய தொகை (1992-93) எவ்வளவு ? (விவசாயப் பொறியியல் துறை)

(ஆ) இத் திட்டம் எந்தெந்த கிராமத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டது ?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

(அ) 1992-93-ல் வரப்பு திரட்டுவதற்கு பார்த்திபனூர் டிவிசன் 1-க்கு ரூ. 3.10 இலட்சமும், பார்த்திபனூர் டிவிசன் 2-க்கு ரூ. 3.10 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) பார்த்திபனூர் டிவிசன் 1-ல், மணக்குடி, கோட்டக்குடி, நகரம், திருவரங்கம், செல்லூர் ஆகிய கிராமங்களிலும், பார்த்திபனூர் டிவிசன் 2-ல், ஆத்தங்குடி, அரியாங்கோட்டை, வேகவயல், பனையடியேந்தல் ஆகிய கிராமங்களிலும் செயல்படுத்தப் படுகிறது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி சப்டிவிஷன், பார்த்திபனூர் சப் டிவிஷன் மூலமாக வேலைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. 1992-93 ஆம் ஆண்டு பார்த்திபனூர் சப்டிவிஷன் மூலம் பரமக்குடி டிவிஷனுக்கு கிட்டத்தட்ட 6.20 இலட்சம் கொடுத்திருக்கின்றார்கள். இத்திட்டத்தின் மூலம் டிவிஷன் விட்டு டிவிஷன் வேலை செய்து வருவது போல, வேலை செய்பவர்களும் ஏரியா விட்டு ஏரியா எடுக்கின்றார்கள். ஆகவே, அப்பகுதியிலுள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் பொருட்டு, இந்த வேலைகளை ஒப்பந்தப் புள்ளி மூலமாக வழங்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மண் அரிப்பைத் தடுத்து ஈரப்பதமிக்க நிலங்களாக மாற்றியமைக்க, அந்தப் பகுதிகளை வேளாண்மைக்கு ஏற்ற நிலங்களாக மாற்றுவதற்கு உரிய திட்டம். அந்தத் திட்டத்தில் சேர்க்கப்படவேண்டிய பயன்பெறாத நிலங்கள் எங்கே இருக்கிறதோ அந்த நிலங்களை தேர்வு செய்து அந்த நிலத்தினுடைய உரிமையாளர்களுக்கு இத்திட்டம் கொடுக்கப்படுகிறது. எனவே, இதை ஒப்பந்தப் புள்ளி வாயிலாக கொடுப்பது என்பது இயலாத காரியம் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண் அரிப்பைத் தடுப்பதற்காகவும், வேலைவாய்ப்பு கொடுப்பதற்காகவும், இத் திட்டம் அமுலாக்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். விவசாய பொறியியல் துறை மூலம் வரப்பு திரட்ட ஒதுக்கப்பட்டு செய்யப்படுகின்ற திட்டம். பரமக்குடி சப்டிவிஷனில் பகவண்டி, செவ்வூர், கள்ளிக்கொண்டம் போன்ற பகுதிகளில் கிட்டத்தட்ட 170 ஏக்கருக்கு மேல் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டு, அந்த சாகுபடியான நிலம், இப்பொழுது சாகுபடி இல்லாத நிலங்களாக

1993 மார்ச் 17]

இருக்கின்றன. அப்பகுதிகளில் இந்த வரப்பு திரட்டும் திட்டத்தின் மூலம், வேலை வாய்ப்பு அளிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொல்கின்ற கருத்தின் அடிப்படையில் அந்த நிலங்கள் ஆய்வுக்கு மேற்கொள்ளப்படும். அது போன்று வேளாண்மைத் திட்டங்களுக்குத் தகுதியற்ற நிலங்களாக இருக்குமென்று சொன்னால் அதனை கருத்திற் கொண்டு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 116, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வினா எண் 117, திரு. கே. செல்வராஜ், இருக்கையில் இல்லை, அவருக்கு பதிலாக திரு. கே. பி. ராஜு, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

117—

சத்துணவு பெறும் குழந்தைகளுக்கு தமிழ், ஆங்கிலப் பாடங்கள் கற்றுக் கொடுத்தல்

*9164—திரு. கே. செல்வராஜ் :
மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் சத்துணவு உண்ணும் குழந்தைகளுக்குத் தமிழ், ஆங்கிலப் பாடங்கள் கற்றுக் கொடுக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போதிருந்து அமுலுக்கு வரும் ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் சத்துணவு உண்ணும் குழந்தைகளுக்கு தமிழில் முன் பருவக்கல்வியும் ஆங்கிலத்தில் மழலையர் பாடல்களும் (Rhymes) தற்போது கற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது.